# ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் பயணத்திற்கு முன்னதாக பாரத பிரதமர் வெளியிட்ட அறிக்கை

பிப்ரவரி 13, 2024

பிப்ரவரி 13-14 ஆகிய தேதிகளில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும், பிப்ரவரி 14-15 ஆகிய தேதிகளில் கத்தார் நாட்டிற்கும் அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறேன். இது எனது ஐக்கிய அரபு அமீரகத்திற்கு மேற்கொள்ளும் ஏழாவது பயணமாகவும், 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு கத்தாருக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணமாகவும் இருக்கும்.

கடந்த ஒன்பது ஆண்டுகளில், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, உணவு, எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளில் ஐக்கிய அரபு அமீரகத்துடனான நமது ஒத்துழைப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது. நமது கலாச்சார மற்றும் மக்களிடையேயான தொடர்பு முன்பை விட வலுவாக உள்ளது.

அபுதாபியில் ஐக்கிய அரபு அமீரக அதிபர் திரு. ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அவர்களை சந்தித்து, நமது விரிவான மூலோபாய கூட்டாண்மையை முன்னெடுத்துச் செல்வது குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்த நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். அண்மையில் குஜராத்தில் நடைபெற்ற துடிப்புமிக்க குஜராத் உலகளாவிய உச்சி மாநாடு 2024 இல் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற அந்நாட்டின் இளவரசரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை அதிபரும், பிரதமரும், பாதுகாப்பு அமைச்சரும், துபாய் ஆட்சியாளருமான திரு. ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தூம் அவர்களின் அழைப்பின் பேரில், 2024 பிப்ரவரி 14 அன்று துபாயில் நடைபெறும் உலக அரசு உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்களின் கூட்டத்தில் நான் உரையாற்ற உள்ளேன். இந்த உச்சிமாநாட்டிற்கு இடையே, துபாயுடனான நமது பன்முகத் தொடர்புகளை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் திரு. ஷேக் முகமது பின் ரஷீத் அவர்களுடன் நான் கலந்துரையாடவுள்ளேன்.

இந்தப் பயணத்தின்போது, அபுதாபியில் உள்ள முதலாவது இந்து ஆலயத்தையும் திறந்து வைக்க உள்ளேன். இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் பகிர்ந்து கொள்ளும் நல்லிணக்கம், அமைதி,

சகிப்புத்தன்மை ஆகியவற்றின் மதிப்புகளுக்கு இந்த BAPS கோயில் ஒரு நிலையான புகழாரமாக இருக்கும்.

அபுதாபியில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அனைத்து இந்திய சமூகத்தினரிடமும் நான் உரையாற்ற உள்ளேன்.

கத்தாரில், திரு. அமீர் ஷேக் தமீம் பின் ஹமாத் அல் தானி அவர்களை சந்திப்பதை நான் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன். அவரது தலைமையின் கீழ் கத்தார் தொடர்ந்து மிகப்பெரிய வளர்ச்சியையும் மாற்றத்தையும் கண்டு வருகிறது. கத்தாரில் உள்ள மற்ற முக்கியப் உயரதிகாரிகளையும் சந்திக்க ஆவலாக உள்ளேன்.

இந்தியாவும், கத்தார் நாடும் வரலாற்று ரீதியாக நெருக்கமான நட்புறவைக் கொண்டுள்ளன. சமீப ஆண்டுகளில், உயர்மட்ட அரசியல் பரிமாற்றங்கள், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரித்தல், நமது எரிசக்தி கூட்டாண்மையை வலுப்படுத்துதல், கலாச்சாரம் மற்றும் கல்வித்துறையில் ஒத்துழைப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நமது பன்முக உறவுகள் தொடர்ந்து ஆழமடைந்து வருகின்றன. தோஹாவில் 8,00,000-க்கும் மேற்பட்ட வலுவான இந்திய சமூகத்தினர் இருப்பது இருநாட்டு மக்களுக்கு இடையேயான வலுவான உறவுகளுக்கு ஒரு சான்றாகும் என பாரத பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

**புது தில்லி**
**பிப்ரவரி 13, 2024**